மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி,
**முன்னிலை : திரு.க.யோகேஷ்வரன்,** **B.A., L.L.B,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
காரியாபட்டி.
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண்.2/2025**
**IN**
**அசல் வழக்கு எண். 245/2024**

வீரம்மாள் ... மனுதாரர் / வாதி

/எதிர்/

பிச்சை .. எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 05.12.2025 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் 13.03.2026 வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்களும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சேகர் அவர்களும் முன்னிலையாகி செய்து கொண்ட இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

**1.** உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் ஆர்டர் 6 ரூல் 17,18 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுவில் கண்ட விபரப்படி அசல் வழக்கின் பிராதை சீர்திருத்தம் செய்து கொண்டு வழக்கை மேல் நடத்த அனுமதி வேண்டி மனு தாக்கல்.

**<u>2.மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்:-</u>**

மனுதாரர்/வாதி தரப்பில், தாவா சொத்தை மனுதாரரின் கணவரை பெற்ற தகப்பனார் சி.பி.அழகன் என்பவர் கோதண்டராமன் வகையறாவிடமிருந்து கடந்த 14.3.1975ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்றுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்தில் மனுதாரருடைய பாத்தியத்தை ஆட்சேபிப்பதால் விளம்புகை பரிகாரம் கேட்பது நல்லது என சட்ட அறிவுரை தற்போது கிடைத்துள்ளது. மேற்படி அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்காமல் தாக்கல் செய்துள்ளது வேண்டுமென்ற ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமானதாகும். இம்மனுவை அனுமதிக்கும் பட்சத்தில் அது எதிர்மனுதாரருக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்த போவதில்லை. எனவே மனுவில் கண்டுள்ளபடி அசல் வழக்கின் பிராதை சீர்திருத்தம் செய்து கொண்டு வழக்கை மேல் நடத்த அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர்/பிரதிவாதி மறுப்புரையின் சுருக்கம்:-</u>**

3(1). எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி அசல் வழக்கில் கடந்த 30.6.2022-ம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். ஆனால், மனுதாரர் 5 ஆண்டுகள் கழித்து தற்போது இம்மனுவை தாக்கல் செய்துள்ளது அசல் வழக்கின் விசாரணையை இழுதடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் தான் தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரர்/வாதியின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

**4. <u>தீர்வு காணவேண்டிய பிரச்சனை:-</u>**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**<u>5. தீர்வு முடிவு:-</u>**

5(1).இம்மனு, எதிருரை, வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

5(2). மனுதாரர்/ வாதி தரப்பில் தாவா சொத்தை மனுதாரரின் கணவரை பெற்ற தகப்பனார் சி.பி.அழகன் என்பவர் கோதண்டராமன் வகையறாவிடமிருந்து கடந்த 14.3.1975ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்றுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்தில் மனுதாரருடைய பாத்தியத்தை ஆட்சேபிப்பதால் விளம்புகை பரிகாரம் கேட்பது நல்லது என சட்ட அறிவுரை தற்போது கிடைத்துள்ளதாகவும், மேற்படி தவறானது வேண்டுமென்ற ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமானதாகும் என்று கூறியுள்ளார்.

5(3). எதிர்மனுதார்/பிரதிவாதியின் தரப்பில், பிரதிவாதி அசல் வழக்கில் கடந்த 30.6.2022-ம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். ஆனால், மனுதாரர் 5 ஆண்டுகள் கழித்து தற்போது இம்மனுவை தாக்கல் செய்துள்ளது அசல் வழக்கின் விசாரணையை இழுதடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் தான் தாக்கல் செய்துள்ளார் என்று கூறியுள்ளார்.

5(4). அசல் வழக்கானது வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக நிலுவையில் உள்ளபோது மனுவானது தாக்கல் செய்திருந்தாலும் கூட மனுதாரர் தரப்பில் வாதியின் கணவரின் தந்தை பெயரில் தபசில் சொத்துக்களுக்குரிய பட்டா உள்ளதால் தாவா சொத்தின் உரிமை குறித்து விளம்புகை பரிகாரம் கோர வேண்டியது அவசியம்

ஏற்பட்டுள்ளது என்று மனுதாரர் தரப்பில் கூறியிருப்பதை பார்க்கையில் தரப்பினர்களுக்கிடையே தாவா சொத்து குறித்து உரிமை மூல பிரச்சனை உள்ளது என்பது தெரியவருகிறது. இது குறித்து மாண்புமிகு சென்னை உச்சநீதிமன்றம், in **Anathula Sudhakar v P. Buchi Reddy (Dead) 2008 (6) CTC 237** என்ற முன்தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> (iii) When it is necessary to file suit for declaration and /or Possession with injunction as a consequential relief: Where plaintiff is in possession but his title to property is in dispute or under cloud or where defendant asserts title and there is also threat of dispossession, plaintiff must sue for declaration of title and consequential injunction. Where title of plaintiff is under cloud or in dispute and he is not in possession or not able to establish possession, necessarily plaintiff will have to file suit for declaration, possession and injunction. A cloud is said to raise over a person's title when there is some defect in his title to property or when some prima facie right of third party over it, is made out or shown. But persons having clear title and possession suing for injunction, should not be driven to more cumbersome remedy of suit for declaration, merely because some meddler vexatiously makes claim.

மேற்படி முன்தீர்ப்பின்படி தரப்பினர்களுக்கிடையே தாவா சொத்து சம்மந்தமாக உரிமை மூல பிரச்சனை இருக்கையில் சொத்தின் உரிமை மூலம் குறித்து முடிவு செய்ய வேண்டியது அவசியம் என்பது தெரியவருகிறது.

5.5) மேலும், மனுதாரர் கோரியுள்ள திருத்தமானது புதிய வழக்கு மூலம் எதையும் அறிமுகப்படுத்துவதாக இல்லை. மனுதாரர் திருத்தம் குறித்து கோரியுள்ள காரணங்கள் ஏற்புடையதாகத்தான் உள்ளது, அதன் உண்மை தன்மை குறித்து எதிர்வாதம் செய்ய எதிர்மனுதாரருக்கு

வாய்ப்புகள் உள்ளன. இச்சமயத்தில் மனுதாரர் கோரியுள்ள திருத்தம் வழக்குரையில் கூறப்பட்டுள்ள வாதங்களுக்கு இயன்றதாக உள்ளது என்பதாலும் மேற்படி தவறை திருத்தாதபட்சத்தில் இந்த மனுதாரருக்கு இழப்பு ஏற்படும் என்றும் கூறப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டும் பார்க்கையில் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும், மேலும் வழக்குகள் அனைத்தும் தகுதியின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்பது பொதுவான விதி. அந்த விதிக்கிணங்க மனுதாரர்/வாதி தரப்பு ஆதாரங்களை முன்னிறுத்த மனுதாரர்/வாதிக்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித அநீதி ஏதும் விளைவிக்கப்படமாட்டாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும், மனுதாரர்/வாதி ரூ.500/-ஐ எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு செலவுத் தொகையாக 17.04.2026 ம் தேதி தேதிக்குள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் மனுவில் கூறப்பட்டவாறு அசல் வழக்கின் பிராதில் திருத்தம் மேற்கொள்ள மனுதாரர்/வாதிக்கு அனுமதி வழங்கி இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

<u>6. இறுதிமுடிவு:-</u>

**முடிவாக, இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. இருப்பினும், மனுதாரர் /வாதி ரூ.500/-ஐ எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு செலவுதொகையாக வரும் 17.04.2026 ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படுமென்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்பட்டதாக கருதப்படுமென்றும் உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்.**

இல்லை.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

| |
|---|
| மா.உ.ம.நீ.ந.நீ. காரியாபட்டி, |
| IA.No. 2/2025 |
| in |
| O.S.No. 245/2024 |
| உத்தரவு |
| நாள். 26.3.2026 |